**************************************************************************************************

# இடைப்பாடி நகராட்சி

## நகரமன்ற அவசரக்கூட்டம்

### நகர் மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானம்

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் தேதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இடைப்பாடி நகரமன்றத்தின் அவசரக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்திருக்கும் தலைவர் திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர் அவர்களின் கூட்ட அரங்கத்தில் உள்ள தலைவர் திரு. கே. மாரிமுத்துபக்தர் அவர்களின் நினைவு கூடத்தில் இடைப்பாடி நகரமன்ற தலைவர் திரு.னு.ளு.ஆ.பாஷா ஆகிய எனது தலைமையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.

**************************************************************************************************

**<u>பொருள். 1</u>**

சங்கத்தமிழ் படைத்த **கலைஞரின்**

தங்க தவப்புதல்வன்

நான்காம் தலைமுறை போற்றிடும்

நற்றமிழ் நாயகன்

குறிஞ்சி மலராய் பூத்து

குன்றிலிட்ட விளக்காய் ஒளிரும்

விடியல் தந்த கதிரோன்

குடிமைகளை கோபுரம் ஏற்றிடும் கோமகன்

வாக்களித்தோர் மட்டுமல்ல

வாக்களிக்காதோரும் போற்றக் கூடிய

மக்கள் பணியியை மாசற செய்திட

எங்களுக்கு வாய்பளித்து

திராவிட முன்னேற்ற கழக பொற்கால ஆட்சியில்

இடைப்பாடி நகராட்சியை மாநிலத்தில்

முதன்மை நகராட்சியாய் முன்னேற்ற

பணித்தமைக்கு தமிழர் குலம் காக்கும்

**முதல்வர் தலைவர் தளபதியார்** அவர்களுக்கும்

உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு.**திரு. கே.என்.நேரு** அவர்களுக்கும்

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் **திரு. டி.எம்.செல்வகணபதி** அவர்களுக்கும்

இந்த நகர்மன்றம் தனது சிரம் தாழ்ந்த நன்றிகளை

கரம் கூப்பி சமர்ப்பித்துக் கொள்கிறது.

**பொருள். 2**

இடையர்பாடி என்றும் தொன்மைப் பெயரால் அழைக்கப் பெற்று இன்று இடைப்பாடியாய் ஏற்றம் கண்டு வரும் இந்த சிறப்புமிகு நகராட்சியில் மூத்த பெருமக்கள் பலர் மன்ற உறுப்பினர்களாய் வீற்றிருந்து சிறப்பு செய்துள்ளனர் அந்த வகையில் ஏற்கனவே மன்ற உறுப்பினர்களாய் செயல்பட்டு இந்நகரின் வளர்ச்சிக்கு முன்னெடுப்பு செய்து முத்திரை பதித்தபலர் மக்களால் நகராட்சி மக்களுக்காக நகராட்சி என்றும் முத்திரை சொல்லை மெய்ப்படுத்திட மீண்டும் கீழ்கண்ட மன்ற உறுப்பினர்களை

| | |
|---|---|
| வார்டு எண் 2 | திரு.சி.சாமியப்பன், |
| வார்டு எண் 4 | திரு.அ.தங்கதுரை |
| வார்டு எண் 7 | திருமதி.ரா.தனம் |
| வார்டு எண் 14 | திருமதி.பா.கீதா |
| வார்டு எண் 15 | திருமதி.நா.ராதா |
| வார்டு எண் 18 | திருமதி.அ.சம்சாத்பேகம் |
| வார்டு எண் 20 | திரு.ம.ரவி |
| வார்டு எண் 22 | திரு.வே.ராம்குமார் |
| வார்டு எண் 24 | திரு.மெ.முருகன் |

இந்தமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது மாபெரும் சிறப்பாகும். அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்று இந்நகராட்சியை சிறப்புடையதாக்க உங்களின் பங்களிப்பை தாருங்கள் என இந்தநகர்மன்றத்தின் சார்பாக பாராட்டி வரவேற்கிறோம்.

**பொருள். 3**

இடைப்பாடி நகரை தனது தலைவர் பொறுப்பில் பொன் நகரமாய் மாற்றி சென்ற முன்னால் பேரூராட்சி நகரமன்ற தலைவர்கள் திரு.S.சின்னாண்டிபக்தர், திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர், திரு.கே.மாரிமுத்துபக்தர் மற்றும் திரு.ஆ.இருசப்பமேத்தா அவர்களின் உருவப்படத்தை இந்நகராட்சியில் உள்ள அமரர் திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர் அவர்களின் கூட்ட அரங்கத்தில் உள்ள தலைவர் திரு.கே.மாரிமுத்துபக்தர் அவர்களின் நினைவு கூடத்தில் பொக்கிசமாய் பேணிகாக்க மன்றத்தின் சார்பாக திறந்துவைக்கிறோம்.

****************************************************************************************************

<u>இடைப்பாடி நகராட்சி</u>
<u>நகரமன்ற சாதாரண கூட்டம்</u>
<u>நகர் மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடைப்பாடி நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்திருக்கும் தலைவர் திரு.ஆர்.கோவிந்தக்கவுண்டர் அவர்களின் கூட்ட அரங்கத்தில் உள்ள தலைவர் திரு. கே. மாரிமுத்துபக்தர் அவர்களின் நினைவு கூடத்தில் இடைப்பாடி நகரமன்ற தலைவர் திரு.டீ.ஜு.ஆ.பாஷா ஆகிய எனது தலைமையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.

****************************************************************************************************

பொருள்.1

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள பகுதிகளின் குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சரியாக வழங்க முடியாத நிலையில் உள்ளது. அப்பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் குடிநீர் வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் பணியை நகராட்சி குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 231 /2022/இ1)

பொருள்.2

இடைப்பாடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிக்கு, TWIC நிறுவனம் மூலம் மதிப்பீட்டு தொகை ரூ.104.10 கோடிக்கு இறுதி விரிவான திட்ட அறிக்கைகை தயாா்செய்யப்பட்டு (Final Detailed Project Report) முழு மான்யத்துடன் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண். 0351/2022/இ2)

பொருள்.3

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப்பட்ட பகுதிகளில் புதியதாக எந்தவொரு LED தெருவிளக்குகளும் மற்றும் பழைய குழல்விளக்குகள், சோடியம் ஆவி மற்றும் மெர்குரி விளக்குகளையும் மாற்றி LED தெருவிளக்குகளாக அமைக்கப்படவில்லை. எனவே, இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் உள்ள சுமார் 2000 எண்ணிக்கைகள் கொண்ட அனைத்து வகையான மின் விளக்குகளையும் LED தெருவிளக்குகளாக மாற்றுதல் மற்றும் இடைப்பாடி நகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் புதியதாக மின்கம்பங்கள், கம்பிவடங்கள் அமைத்து LED மின் தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.3.66 கோடிக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.0351 /2022/இ2)

பொருள்.4

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன புதிய பேருந்து நிலையமாக அமைக்க நவீன வணிக வளாகம் அமைக்கும் பொருட்டு பேருந்து நிலையத்தில் நகராட்சிக் சொந்தமான இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் இல்லாததாலும் பழுதடைந்துள்ள அனைத்து பழைய கடைகளை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக பூமி தளத்தில் (Underground) வாகனம் நிறுத்தும் இடம் அமைப்பதன் மூலம் பொதுமக்கள் மிகவும் பயன் பெறுவதுடன் நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும் வகையிலும் இருக்கும். தரைதளத்தில் (Ground Floor) புதியதாக சிமெண்ட் தளம் அமைத்தும், புதியதாக பேருந்து நிறுத்த தடங்கள் (Bus Bays) அமைத்தல் மற்றும் நவீன வணிக கடைகள் கட்டுதல். மேலும், முதல் தளம் (First Floor) மற்றும் இரண்டாம் தளத்தில் (Second Floor) நவீன வணிக கடைகள் அமைத்து குத்தகைக்கு விடுவதன் மூலம் இந்நகர் நவீன நகரமாக மாற்றம் பெறுவதுடன் இந்நகராட்சின் ஆண்டு வருமானம் அதிகம் ஆகும். இதன் மூலம் நகராட்சி பேருந்து நிலையத்தை தரம் உயர்த்தலாம். மேலும், இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக முன்னேற்றம் செய்யலாம். எனவே, மேற்காணும் திட்டத்தை செயல்படுத்த ரூ.38.00 கோடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

**அலுவலககுறிப்பு**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.0351 /2022/இ2)

பொருள்.5

இடைப்பாடி நகர பகுதி சாலைகளில் போதுமான தெருவிளக்குகள் இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்தே உள்ளது. எனவே, இடைப்பாடி நகராட்சிக்குட்டபட்ட சேலம் பிரதான சாலையில் அமைந்துள்ள கேட்டுகடை சந்திப்பு பகுதியிலிருந்து பேருந்து நிலையம் வரையிலும் (2 கி.மீ) மற்றும் ஜலகண்டாபுரம் சாலையில் உள்ள க.புதூர் பகுதியில் இருந்து GRT பெட்ரோல் பங்க் வரையிலும் (1 கி.மீ) **சென்டர் மீடியனில்** சாலையின் இருபுறமும் வெளிச்சம் இருக்கும் வகையில் (Center Median) 200 எண்ணிக்கை தெருவிளக்கு அமைத்தல் மூலம் நகரப் பகுதியில் முழு வெளிச்சத்துடனும் போக்குவரத்துக்கு எந்த ஒரு இடையூறு இல்லாமாலும் இருக்கும். எனவே, மேற்காணும் திட்டத்தை செயல்படுத்த ரூ.1.90 கோடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

**அலுவலககுறிப்பு**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.0351 /2022/இ2)

பொருள்.6

இடைப்பாடி நகராட்சிக்கு செந்தமான எடப்பாடி வட்டம் தங்காயூர் கிராமம் ச.எண்.58/3 மொத்த விஸ்தீர்ணம் 2.31.5 ஹெக்டேர் பாறை புறம்போக்கு நிலத்தில் 1.21.5 ஹெக்டேர் அல்லது 3 ஏக்கர் நிலத்தில் இடைப்பாடி நகராட்சியின் மூலம் காற்றோட்ட வசதி மற்றும் பார்க்கிங் வசதியுடன் சமூதாய கூடம் அமைத்தல் மூலம் நகர மக்கள் மற்றும் சுற்றி உள்ள கிராம மக்கள் அனைவரும் குறைந்த வாடகையில் அரசின் மூலம் பயன்பெறும் வகையில் இருக்கும். மேலும்,

இடைப்பாடி நகராட்சிக்கு ஒரு கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலும் அமையும். எனவே, மேற்காணும் திட்டத்தை செயல்படுத்த ரூ.5.00 கோடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.0351 /2022/இ2)

பொருள்.7

இடைப்பாடி நகராட்சியானது சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 59891 ஆகும். இந்நகராட்சியில் 30 வார்டுகள் உள்ளன. நகராட்சியின் பரப்பளவு 28.22 சதுர கிலோமீட்டர் ஆகும். இந்நகராட்சியில் 477 எண்ணிக்கை சாலைகள், 227 எண்ணிக்கை தெருக்கள் மற்றும் 301 வீதிகளும் மொத்தம் 999 எண்ணிக்கைகளில் 148.93 கி.மீட்டர். சாலைகள் உள்ளது. இதில் 78.15 கி.மீட்டரில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 34 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 1 எண்ணிக்கை கட்டண கழிப்பிடம் உள்ளது. மேலும், சில பகுதிகளில் வடிகால் வசதி இல்லாமலும் உள்ளது.

மேலும், இந்நகராட்சியில் உள்ள திறந்தவெளி வடிகால் மூலமாக கொசு தொல்லை ஏற்பட்டு முழுமையான சுகாதாரம் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, கழிவு நீர் வெளியேற்ற பாதாள சாக்கடை அமைக்கும் பட்சத்தில் இடைப்பாடி நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வடிகால் வசதி செய்து மக்களுக்கு முழுமையான சுகாதார வசதி ஏற்படுத்தும் வண்ணம் பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துவதன் மூலம் வடிகால் வசதி இல்லாத பகுதிகளுக்கும் வடிகால் வசதி செய்து தரலாம். நகர பிரதான சாலைகளில் மழைகாலங்களில் மழைநீர் வடிகால் நிரம்பி சாலைகளில் வருவதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் இருக்கும் என்பதால் இடைப்பாடி நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவுசெய்யலாம்.

பொருள்.8

இடைப்பாடி நகராட்சியில் 16.03.2022 அன்று நடைபெற உள்ள முதல் நகர் மன்ற கூட்டத்தில் இந்நகராட்சியின் முன்னாள் பேரூராட்சி மற்றும் நகர் மன்ற தலைவர்களின் உருவ படத்தை திறந்து வைக்க உள்ளது. எனவே அத்தலைவர்களின் உருவபடத்தை ஒரே மாதியாக வடிவமைத்து வைக்க கோரி நகர்மன்ற தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி 4 முன்னாள் தலைவர்களின் உருவபடத்தை 20X30 அளவில் புகைப்படங்களை Printout மற்றும் Frame போட்டமைக்கு தொகை ரூ.15200/– யை திரு.ம.கண்ணன், உதவியாளர் அவர்களால் வழங்கப்பட்டதை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் தொகை ரூ15200/—யை பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.0303/2022/இ2)

பொருள்.9

இடைப்பாடி நகராட்சியின் 2021—2022ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2022—2023—ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

2021—2022 —ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும், 2022—2023ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 0346/2022/பி1)

பொருள்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம்.டி திட்ட கடை எண்.50 மற்றும் ஐ.யு.டி.பி கடை எண்.73 ஆகிய இரு கடைகளுக்கும் வாடகை நிர்ணய செய்யப்பட்டு 31.01.2022ந் தேதியுடன் முதல் மூன்றாண்டு காலம் முடிவடைவதால் அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளதன்படி, தற்போதைய வாடகையில் இருந்து 15% சதவீதம் கீழ்கண்ட விபரப்படி வாடகை உயர்வு செய்து 01.02.2022 முதல் 31.03.2025 வரையிலான இரண்டாவது மூன்றாண்டு காலத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடையின் விபரம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | தற்போது செலுத்தி வரும் வாடகை ரூ | அரசாணை (நிலை) எண்.92, ந.நி.ம.கு.வ.துறை நாள்.03.07.2007 ன்படி 15 சதவீதம் வாடகை உயர்வு | 01.02.2022 முதல் செலுத்தப்பட வேண்டிய வாடகை (சேவைவரி உட்பட) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.50 | திரு.எஸ்.கருணாநிதி, கவுண்டம்பட்டி புதியதெரு, இடைப்பாடி | 6000 | 900 | ரூ.6900/— GST ரூ 1242/— மொத்தம் = 8142 /— |
| 2 | பேருந்து நிலைய IUDP திட்ட கடை எண்.73 | திருமதி.மல்லிகா | 3000 | 450 | ரூ.3450/— GST ரூ. 621/— மொத்தம் = 4071 /— |

அலுவலககுறிப்பு

அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாடகை உயர்வு செய்து உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2092/2021/பி4)

பொருள்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் IGFF கடைகள் 1,7,10,14,16,18 ஆகிய 6 கடைகளுக்கும் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 28.02.2022ந் தேதியுடன் முதல் மூன்றாண்டு காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு 01.03.2022 முதல் 28.02.2025 வரை இரண்டாவது மூன்றாண்டு காலத்திற்கு கீழ்கண்ட விபரப்படி 15% சதவீதம் வாடகை உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடையின் விபரம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | தற்போது செலுத்தி வரும் வாடகை ரூ | அரசாணை (நிலை) எண்.92, ந.நி.ம.கு.வ.துறை நாள்.03.07.2007 ன்படி 15 சதவீதம் வாடகை உயர்வு | 01.03.2022 முதல் பிரதி மாதம் செலுத்தப்பட வேண்டிய வாடகை (சேவைவரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.1 | திரு.பி.நாராயணன் | 15800 | 2370 | 18170 |
| 2 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.7 | திரு.டி.வையாபுரி | 13500 | 2025 | 15525 |
| 3 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.10 | திருமதி.ல.ருக்குமணி | 13905 | 2086 | 15991 |
| 4 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.14 | திரு.ஆர்.ராம்குமார் | 12300 | 1845 | 14145 |
| 5 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.16 | திரு.எம்.சக்திவேல் | 14600 | 2190 | 16790 |
| 6 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.18 | திருமதி.ஏ.சரோஜா | 12900 | 1935 | 14835 |

அலுவலககுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாடகை உயர்வு செய்ததையும், உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2093/2021/பி4)

பொருள்.12

இடைப்பாடி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறையில் (5' x 2.5') அளவில் ஒரு மேஜை மற்றும் ஆணையாளர் அறையில் (5' x 2.5') அளவில் இரண்டு மேஜைகள், நகர்மன்ற தலைவர் அறை கதவை (உள்அறை (இரண்ட கதவு)) அகற்றி ஒரு கதவாக அமைத்தல், நகர்மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறையில் உள்ள மேஜையின் மேல் கண்ணாடி அமைத்தல் மற்றும் ஆணையாளர் அறைக்கு கிரேடு 1 சேர் ஒரு எண்ணிக்கை வாங்குதல்

போன்ற பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 0254 /2022/இ2)

பொருள்.13

இடைப்பாடி நகராட்சி 2021—2022ம் ஆண்டு பொது நிதியில் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 28.01.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது, நகர்புறம் சாதாரன உள்ளாட்சி தேர்தல் 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதால் தேர்தல் நடத்தை கட்டுப்பாட்டு வரன்முறையின் படி கீழ்கண்ட பணியை ஒத்தி வைக்கப்பட்டு தேர்தல் நடத்தை கட்டுப்பாட்டு முடிந்து 28.02.2022 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இடைப்பாடி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூட்டத்திற்கு ஒலி பெருக்கி மற்றும் ஒலி உள்வாங்கி வாங்கி பொருத்துதல் மற்றும் Video Conference அறையில் கேமிரா மற்றும் LED தொலைகாட்சி வாங்கி பெருத்துதல் பணி. | 6.50 | M/s.GSC Technology & System, Komarapalayam. | மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவு |
| | | | M/s.Pernnial System, Salem. | மதிப்பீட்டை விட 3.48 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு.

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.GSC Technology & System, Komarapalayam, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று M/s.GSC Technology & System, Komarapalayam அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.14

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கு ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022 வரை JICA புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட தலைமை குடிநீர் நிலையம், வீட்டு வசதிவாரிய நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு மற்றும் பிரதான குழாய்கள் பராமரிப்பு ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்ட பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9,90,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. **<u>பூலாம்பட்டிதலைமைகுடிநீரேற்றுநிலையம்.</u>**

அ) மின் பணியாளர் நிலைஐஐ – 2 பணியாளர்கள்

ஆ) வடிகட்டிபடுக்கை சுத்திகரிப்பாளர் – 2 பணியாளர்கள்

இ) உதவியாளர் – 2 பணியாளர்கள்

2. **<u>இடைப்பாடிதரமட்ட நீர்த்தேக்கதொட்டி</u>**

அ) மின் பணியாளர் நிலைII – 2 பணியாளர்கள்

ஆ) உதவியாளர் – 1 பணியாளர்

3. **<u>குழாய்பராமரிப்புபணிகள்</u>**

அ) குழாய்பொருத்துனர் – 1 பணியாளர்

ஆ) உதவியாளர் – 1 பணியாளர்

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. JICA குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,90,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கேரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள்.15

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 23.03.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| | JICA புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையம், வீட்டு வசதிவாரிய நீர்த்தேக்கதொட்டி பராமரிப்பு மற்றும் பிரதான குழாய்கள் பராமரிப்பு | 9.90 | ஜ ஆரி எண்டர்பிரைசர்ஸ், சேலம் | மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் (ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022) | | ஸ்ரீ கணேசா & கோ மேட்டூர் | மதிப்பீட்டை விட 0.84 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **ஜஅரி எண்டர்பிரைசர்ஸ், சேலம்.** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்

(ந.க.எண். 225/2022/இ2)

பொருள்.16

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 22.03.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் (ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022) | 9.90 | ஜஅரிஎன்டர் பிரைசஸ், ஒப்பந்ததாரர், சேலம். | 0.15ரூ மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ கணேசா ங கோ, ஒப்பந்ததாரர், மேட்டூர். | 2.50ரூ மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலககுறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15 சதவீதம்
   குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **ஜஅரி எண்டர்பிரைசர்ஸ், சேலம்.** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்

(ந.க.எண் 247/2022/இ1)

பொருள்.17

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கு ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022வரை குடிநீர் வழங்கும் வால்வு மற்றும் மேல்நிலை தொட்டிகளை இயக்கி பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களைசப்ளை செய்யும் பணிக்கு தாயர் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வால்வு திருப்புநர் பணியாளர் மற்றும் மேல்நிலை தொட்டிகளை இயக்கிபராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,90,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கேரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 247/2022/இ1)

பொருள்.18

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கு ஏப்ரல் 2022 முதல் அக்டோபர் 2022வரை தெருவிளக்குகளை இயக்கி பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் மின் கம்பியாளர்கள் மற்றும் மின்கம்பி உதவியாளர்களைசப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்த அடிப்படையில்பணியாளர் தெருவிளக்குகளை இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,90,000/–யை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கேரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 248/2022/இ1)

பொருள்.19

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டு பொது நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 23.03.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல் பணி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மின் கம்பியாளர்கள் மற்றும் மின்கம்பி உதவியாளர் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் (ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022) | 9.90 | ஜஓரிஎன்டர் பிரைசஸ், ஒப்பந்ததாரர், சேலம். | 0.18ரூ மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ கணேசா ¬ கோ, ஒப்பந்ததாரர், மேட்டூர். | 2.52ரூ மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலககுறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.18 சதவீதம்

குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **ஜஸ்ரி எண்டர்பிரைசர்ஸ், சேலம்.** ஒப்பந்ததாரரின்

ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்
(ந.க.எண் 248/2022/இ1)

தலைவர்,
இடைப்பாடி நகர்மன்றம்.